## முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.

முன்னிலை - திருமதி. அ.மலர்விழி, எம்.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

2019-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 -ஆம் தேதி புதன்கிழமை

**மேல்முறையீடு வழக்கு எண்.1/2019**

1. ரத்தினம்
2. கைருன்னிசா பேகம்
3. பரமேஸ்வரி ... மேல்முறையீட்டாளர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. வெள்ளைச்சாமி
2. அர்ஜூனன்
3. மாதேஸ்வரி
4. கிராம நிர்வாக அலுவலர்
   தாந்தோணி கிராமம், கரூர் வட்டம்.
5. வட்டாட்சியர், கரூர்
6. மாவட்ட ஆட்சியர், கரூர். ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்/பிரதிவாதிகள் 4 முதல் 6

கரூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.470/2011-ல் கடந்த 25.09.2018-ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ஆட்சேபித்து, அதனை ரத்து செய்யக் கோரியும், இம்மேல்முறையீடானதை அனுமதிக்க வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

/இடையே/

1. வெள்ளைச்சாமி
2. அர்ஜூனன்
3. மாதேஸ்வரி ... வாதிகள்

மற்றும்

1. ரத்தினம்

2. கைருன்னிசா பேகம்

3. பரமேஸ்வரி

4. கிராம நிர்வாக அலுவலர்

   தாந்தோணி கிராமம், கரூர் வட்டம்.

5. வட்டாட்சியர், கரூர்

6. மாவட்ட ஆட்சியர், கரூர் ... பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடு கடந்த 11.07.2019-ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மேல்முறையீட்டாளாகள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.பிரகாஷ் மற்றும் 1 முதல் 3எதிர்மேல்முறையீட்டாளர்கள்/தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். குடியரசு ஆகியோர் முன்னிலையாகியும், 4 முதல் 6எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.எம். நடேசன் அவாகள் முன்னிலையாகியும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை, இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள், சாட்சி சான்றாவணங்கள், நீதிமன்ற சான்றாவணங்கள், வழக்கு கோப்புகள் மற்றும் இம்மேல்முறையீட்டிற்கான காரணங்கள் ஆகியவைகளை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்பும், இது நாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## <u>தீர்ப்புரை</u>

கரூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.470/2011-ல் கடந்த 25.09.2018-ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ஆட்சேபித்து, அதனை ரத்து செய்யக் கோரியும், இம்மேல்முறையீடானதை அனுமதிக்க வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :-

2) தாவா சர்வே எண்.537 ஒரு முத்துசாமி கவுண்டருக்கும் கருப்பண்ண கவுண்டருக்கும் கடந்த 02.05.1969ம் தேதியிட்ட கிரயப் பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்றும், 1ம்வாதி மேற்படி கருப்பண்ண கவுண்டர் மற்றும் முத்துசாமியிடமிருந்தும் கடந்த 28.09.1973ம் தேதி தாவா 1வது அயிட்டச் சொத்தை கிரயம் பெற்றதாகவும், மேலும், சுந்தரம் என்பவர் கடந்த 28.09.1973ல் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரயம் பெற்றதாகவும், 2ம் வாதி இறந்து போன ஒரு சுந்தரம் என்பவரின் மகன், 3ம் வாதி சுந்தரத்தின் மருமகள் என்றும் மேற்படி சுந்தரம் 8 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன பின்பு அவரது மகனான விஜயசாரதியும் இறந்து விட்டார் என்றும், சர்வே எண்.537ல் கிரய ஆவணங்களின்படியும் வாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவின் படியும் முழு உரிமையாளர் என்றும், தாவா சொத்திற்கு வாதிகள் கிஸ்து செலுத்தி வருவதாகவும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கிடை சொத்திற்கு அருகில் வசிப்பவர்கள் என்றும், அவர்களுக்கு தாவா சொத்தில் உரிமை இருப்பதை போல் வருவாய்த்துறை அதிகாரிகளை நம்ப வைத்து பட்டா முதலான ஆவணங்கள்போல முயற்சித்து மாவட்ட குற்ற பிரிவு போலீசில் வாதிகள் மீது புகார் கொடுத்து தொல்லை செய்து வந்ததாகவும் எனவே, பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசாரணை நீதிமன்றத்தில் 2ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்டுள்ளதின் சுருக்கம்</u> :-

3) தாவா வழக்குரையில் வாதி சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்து விபரம் சரியானதல்ல. பிரதிவாதிகள் வெள்பபடையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், வாதிகள் உண்மையான சங்கதிகளை மறைத்து விட்டு இந்த வழக்கினை

பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 15.09.1962ம் தேதியில் நாச்சியப்ப கவுண்டர் பெயரில் ஏற்பட்டுள்ள கிரயப்பத்திரத்தின்படி மேற்படி சொத்துக்கள் நாச்சியப்ப கவுண்டருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், மேற்படி நாச்சியப்ப கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட தாந்தோணி கிராமம் சர்வே எண்.537ல் உள்ள ஏக்.12.66ல் ஏக்.4.94ல் பொதுவில் பாதி ஏக்.2.47செண்ட பூமியை பொறுத்து கடந்த 02.05.1969ம் தேதியன்று ஒரு முத்துசாமி என்பவருக்கு ஆதரவாக ஒரு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதே தேதியில் சர்வே எண்.537ல் உள்ள ஏக்.12.66ல் ஏக்.4.94ல் பொதுவில் மற்றொரு பாதி ஏக்.2.47 செண்ட் பூமியை பொறுத்து கடந்த 02.05.1969ம் தேதி ஒரு கருப்பண்ண கவுண்டர் என்பவருக்கு மற்றொரு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், கடந்த 04.05.1971ம் தேதி சர்வே எண்.537ல் கிழமேல் ரோட்டுக்கு வடக்கில் உள்ள இடத்தில் ஏக்.0.04 செண்ட நிலத்தை கருப்பண்ண கவுண்டரும் முத்துசாமி கவுண்டரும் சேர்ந்து 3ம் பிரதிவாதியின் தந்தையான வெங்கடாஜலம் த/பெ ராமசாமி நாடார் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்ததாகவும் கடந்த 14.07.1971ம்தேதி மேற்படி ஏக்.0.04 செண்ட் நிலத்திற்கு கிழக்கில் ஏக்.0.01 செண்ட நிலத்தை மேற்படி வெங்கடாஜலம் த/பெ ராமசாமி நாடார் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்ததாகவும் எனவே, மேற்படி வெங்கடாஜலம் த/பெ ராமசாமி நாடாருக்கு ஏக்.0.05 செண்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஏக்.0.01 செண்ட் நிலத்திற்கு கிழக்கில் ஏக்.0.04 நிலத்தை பொறுத்து மேற்படி கருப்பண்ண கவுண்டரும் முத்துசாமி கவுண்டரும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், கடந்த 10.02.1972ம் தேதியன்று மேற்படி ஏக்.0.04 செண்ட் நிலத்திற்கு கிழக்கில் ஏக்.0.05-1/2 நிலத்தை 1ம்பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றம், மேற்படி வெங்கடாஜலம் த/பெ ராமசாமி நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட பூமியில் கிரயம் பெற்ற உடனேயே அவர் குடியிருப்பதற்காக வீட்டை கட்டி அதில் குடியிருந்து உள்ளார் என்றும், மேற்படி வெங்கடாஜலம் த/பெ ராமசாமி நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட பூமியில் கிரயம் பெற்ற உடனேயே அவர் குடியீருப்பதற்கு வீட்டை கட்டி அதில் குடியிருந்து வந்தார் என்றும், மண் சுவர் என்பதால் மழையில் மேற்படி வீடு இடிந்து விட்டதாலும் தனது வயோகத்தினாலும் மேற்படி வெங்டாஜலம் த/

பெ ராமசாமி நாடார் காங்கேயத்தில் உள்ள 3ம் பிரதிவாதியின் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றும், கிரயப்பத்திரங்களை எழுதும் போது தவறுதலாக சர்வே எண்.537 ஏக்.4.94 என்பதற்கு பதிலாக சர்வே எண்.538 ஏக்.6.96 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி கிரயப் பத்திரங்களை எழுதிக் கொடுத்த கருப்பண்ண கவுண்டரும் முத்துசாமி கவுண்டரும் வேண்டுமென்றே துர்லாபம் அடையும் நோக்கத்துடன் அவ்வாறு தவறுதலாக அவர்களுக்கு பாத்தியமில்லாத சர்வே எண்களை 1ம்பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், எனவே, கருப்பண்ண கவுண்டருக்கும் முத்துசாமி கவுண்டருக்கும் சர்வே எண்.538ல் எவ்விதமான பாத்தியமும் இல்லை என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிகள் காலி நிலமாக உள்ளதையும் வாதிகள் சாதகமாக பயன்படுத்திக் கொண்டும் நிலங்கள் நேரடியாக வெள்ளியணை புதிய பைபாஸ் சாலையை அடைகிறது என்பதாலும் மேற்படி நிலங்களின் விலை மதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளதாலும் பிரதிவாதிகளிடமிருந்து பணமோ அல்லது மேற்படி நிலங்களையோ பெற துர்லாபமடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், உண்மையில் வாதிகள் தான் 1ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளின் அமைதியான சுவாதீனத்தில் இடையூறுகள் செய்து வருகிறார்கள் என்றும், எனவே, பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக கரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் நில மோசடி தொடர்பாக புகார் கொடுத்துள்ளனர் என்றும், அதன் மீதான விசாரணைக்கு பின்னிட்டு தான் வாதி அந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதிகள் தாவாவில் சொல்லியுள்ள சொத்து விபரம் முற்றிலும் தவறானது என்றும், வாதி தாவா சொத்து விபரத்தில் காட்டியுள்ள சொத்தில் பிரதிவாதிகளின் சொத்துக்களும் உள்ளடக்கி உள்ளதென்றும், வாதி அவருடைய கிரயப் பத்திரத்தில் தவறான நான்கெல்லையை குறிப்பிட்டு கிரயம் எழுதி வாங்கிக் கொண்டு பிரதிவாதிகளின் சொத்தையும் அபகரித்து துர்லாபம் அடைய பார்க்கிறார் என்றும், எனவே, மேற்படி தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசாரணை நீதிமன்றத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்வழக்குரை விபரம்</u>

4) தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்து விபரம் சரியானதல்ல என்றும், பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை வாதிகளே நிருபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், வாதிகள் உண்மையான சங்கதியை மறைத்து விட்டு இந்த வழக்கினை பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா தாக்கல் செய்த தேதியில் வாதி தாவா சொத்தின் உரிமையாளர் அல்ல என்றும், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகள் 4 முதல் 6 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து தாவா சொத்திற்கு பொய்யான ஆவணங்களை தயாரித்ததாக சொல்லியுள்ளது தவறு என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டும்.

5) விசாரணை நீதிமன்றத்தில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையினை பரிசீலனை செய்து வழக்கின் தீர்வுக்காக கடந்த 24.01.2012-ஆம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன :-

1) வாதிகள் வழக்கில் கோரியுள்ளபடி நிரந்தர தடையுத்தரவு பெற அரகரா?
2) வாதிக்கு கிட்டும் இதர பரிகாரம் யாது?

6) கீழமை நீதிமன்ற விசாரணையின் போது, வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம்பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் மற்றும் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 3ம்பிரதிவாதி பி.வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மகுடீஸ்வரன் என்பவர் பி..வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.4 முதல் சா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு விபரக் குறிப்பின் சுருக்கம்</u> :-

7) கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டப்படிக்கும், சாட்சியத்திற்கும் விரோதமாக உளளது.. கீழமை நீதிமன்றத்தில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை முறையாக பரிசீலிக்கவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளின் கிரயதாரர்கள் பு.ஏ.537ல் கண்ட சொத்தை தான் விற்க நினைத்து அந்தச் சொத்தை தான் விற்றிருக்கிறார்கள் என்று பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களிலிருந்து தெரிகிறது என்ற விபரத்தை கீழமை நீதிமன்றம் கவனிக்கத் தவறி விட்டது. கருப்பண்ணக் கவுண்டருக்கு புல எண்.538ல் செண்ட் 6.79ல் 3.39.1/2 செண்ட்டை விற்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் அதைப் பொறுத்து அவர் விற்க முடியாது. பி.வா.சா.4ன் சாட்சியத்தையும் அவர் மூலம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்திற்கும் கீழமை நீதிமன்றம் முக்கியத்துவம் தர தவறிவிட்டது. 2ம் பிரதிவாதியின் கணவர் பெயர் மோகன் என்கிற பாபு என பிரதிவாதிகள் நிரூபிக்கத் தவறி விட்டார்கள் என கீழமை நீதிமன்றம் முடிவு செய்திருப்பது தவறு. புல எண்.537/11 மற்றும் 537/10ஐ பொறுத்து கீழமை நீதிமன்றம் தீர்ப்புரையில் விவாதிக்கவில்லை. பிரிவு 94 இந்திய சாட்சியச் சட்டத்தின்படி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ஏற்க மறுப்பதாக கீழமை நீதிமன்றம் முடிவு செய்திருப்பது தவறானது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையும் வரைபடமும் பிரச்சினைக்குரிய சங்கதிகளை பிரதிபலிக்கவில்லை என்று கீழமை நீதிமன்றம் சொல்லியிருப்பது தவறானது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை கீழமை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறி விட்டது. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் புல எண்.537 என்பதற்கு பதிலாக புல எண்.538 என தவறாக குறிப்பிட்டு சொல்லியிருப்பது நம்பும்படியாக இல்லை என்று கீழமை நீதிமன்றம் முடிவு செய்திருப்பது தவறானதாகும். தாவா சொத்துக்களில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதிகளின் உரிமையை மறுத்துள்ள நிலையில் வாதிகள் வழக்குரையை திருத்தம் செய்து உரிமை விளம்புகை பரிகாரம் கோராததால் கீழமை நீதிமன்றம் வழக்கு தள்ளுபடிக்குரியது என்பதை கவனிக்கத் தவறிவிட்டது. அதனால், இம்மேல்முறையீட்டை அனுமதித்து கீழமை நீதிமன்றத்தின்

தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இதர பரிகாரங்களுடன் தீர்ப்பளிக்க வேண்டும்.

8) இந்த மேல்முறையீட்டின் போது, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களை எவ்வாறு பாவிக்கப்பட்டவர்களோ அதை தான் இந்த மேல்முறையீட்டிலும் பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

9) கற்றறிந்த இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலிக்கும் பொழுது, கீழ்க்கண்ட பிரச்சனைகள் இவ்வழக்கின் தீர்வுக்கு ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

1. கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்யப்பட வேண்டுமா?

<u>பிரச்சனை எண்.1</u> :-

10) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. கற்றறிந்த இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலிக்கும் பொழுது, **வா.சா.ஆ.1** 2.5.1969 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். அதில் முத்துசாமி கவுண்டருக்கு நாச்சியப்ப முதலியார் எழுதிக் கொடுத்த சுத்த கிரயப் பத்திரமாகும். அதில் நாச்சியப்ப முதலியார் 15.03.1962ம் தேதியில் பழனி முதலியார் மற்றும் அவருடைய மகன்களிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை எழுதிக் கொடுத்ததாக கண்டுள்ளது. அதன் சொத்து விபரத்தில் புஞ்சை புல எண்.537 ஏக்.12.66க்கு வெள்ளக் கவுண்டர் பூமிக்கும் கிழக்கு, காளியண்ணக் கவுண்டர் பங்கிற்கு தெற்கு, வடக்கு, நந்தவனத்திற்கு மேற்கு. இதன் மத்தியில் ஏக்.4.94 பொதுவில் பாதி ஏக்.2.47. புஞ்சை புல எண்.538 ஏக்.11.54ல் கிணற்றுக்கு தென்புறத்தில் காளியண்ணக் கவுண்டர் பூமிக்கும் தெற்கு, தென் வடல் பாதைக்கும் மேற்கு, கிழமேல் பாதைக்கும் வடக்கு, வெள்ளக் கவுண்டர் பூமிக்கும் கிழக்கு. இதன் மத்தியில் ஏக்.6.96க்கு ஏக்.3.94 கிரயம்

கொடுத்ததாக கண்டுள்ளது. **வா.சா.ஆ.2.** **2**.5.1969 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். அதன்படி கருப்பண்ணக் கவுண்டருக்கு நாச்சியப்ப முதலியார் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரத்தின் நகல். அதில் சொத்து விபரத்தில் சர்வே எண்.537 ஏக்.12.66க்கு வெள்ளக் கவுண்டர் பூமிக்கு தெற்கு, காளியண்ணக் கவுண்டர் பங்கிற்கும் தெற்கு, வடக்கு , நந்தவனத்திற்கும் மேற்கு இதன் மத்தியில் இதில் ஏக்..4.94க்கு பொதுவில் பாதி 2.47 மற்றும் புல எண்.538ல் வடபுறம், காளியண்ண கவுண்டர் பாகத்திற்கும் தெற்கு தென் வடல் பாதைக்கும் மேற்கு, கிழமேல் பாதைக்கும் வடக்கு இதன் மத்தியில் 6.96க்கு ஏக். 3.94 இந்த தரமுள்ள பூமிகளும் கிரயம் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது. எனவே, வா.சா.அ.1,2ஐ பரிசீலக்கையில் புல எண்.538ன் தென்புறத்தில் கிழமேல் பாதை இருப்பதாக தெரிகிறது. மேலும், வா.சா.அ.2ன்படி புலஎண்.538ல் மச்சுசாளை ஓட்டுவில்லைவீடு இருப்பதாகவும் கண்டுள்ளது. எனவே, புல எண்.538ல் 1969ம் ஆண்டிலேயே நாச்சியப்ப முதலியார் கிரயம் கொடுத்த சொத்தில் மச்சு வீடும், அதற்கு அந்த புல எண்ணுக்கு தென்புறத்தில் கிழமேல் பாதையும் இருக்கிறது என்பதும் தெரிகிறது.

11) பி.**வா.சா.ஆ.3** ஆவண எண் 1247/1971ன் பதிவான கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல். அதன்படி 14.5.71ம் தேதியில் வெங்கடாச்சல நாடாருக்கு கருப்பண்ணக் கவுண்டரும், கருப்பண்ணக் கவுண்டர் மகன் கருப்பண்ணக் கவுண்டரும் பெரியண்ண கவுண்டர் மகன் முத்துசாமிகவுண்டரும் எழுதிக் கொடுத்த சுத்த கிரயப்பத்திரத்தின் சாசனம். இதில் கிரயச் சொத்தாக தாந்தோணி கிராமம் புல எண்.538ஏக்.11.54 இதில் தாங்கள் கிரயம் பெற்றது தெற்கு கோட்டில் வெங்கடாசல நாடாரின் மனைக்கு கிழக்கு, எங்கள் பூமிக்கும் மேற்கு தெற்கு, கிழமேல் ரோடுக்கு வடக்கு இதன் மத்தியில் கிழமேல் அடி 30, தென் வடல் அடி 60 அளவுள்ள சொத்தானது கிரயமும் சுவாதீனமும் கொடுத்ததாக கண்டுள்ளது. **பி.வா.சா.ஆ.2** ஆவணமானது ஆவண எண்.2364/71 பத்திரத்தின் சான்றிட்ட நகல். அதன்படி 14.07.1971ம் தேதியில் சையத் முகமது மனைவி கைருன்னிசா பேகத்திற்கு கருப்பண்ணக் கவுண்டர் மகன் கருப்பண்ணக் கவுண்டரும், பெரியண்ண கவுண்டர் மகன்

முத்துசாமி கவுண்டரும் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரம். அதில் சொத்து விபரத்தில் தாந்தோணி கிராமம் புல எண்.538 ஏக.11.54க்கு இதில் தாங்கள் கிரயம் பெற்றது ஏக்.6.96 இதில் தென் கோட்டில் வெங்கடாச்சல நாடார் மனைக்கும் கிழக்கு எங்களது பூமிக்கும் மேற்கு தெற்கு கிழமேல் ரோடுக்கும் வடக்கு. இதன் மத்தியில் கிழமேல் 30 அடி தென் வடல் 60 அடி உள்ள மனை நிலம். கிரயமும், கிரய சுவாதீனமும் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது. **பி.வா.சா.ஆ.**1 10.02.1972ம் தேதியிட்ட சிவசுப்ரமணி மனைவி ரத்தினம் அம்மமாளுக்கு கருப்பண்ணக் கவுண்டர் மகன் கருப்பண்ணக் கவுண்டரும் பெரியண்ண கவுண்டர் மகன் முத்துசாமி கவுண்டர் ஆகிய இருவரும் எழுதிக் கொடுத்த சுத்த கிரயப்பத்திரம். அதில் தாந்தோணிமலை 538 ஏக்.11.54க்கு தாங்கள் கிரயம் பெற்றது ஏக்.6.96 . இதில் கைருன்னிசா மனைக்கு கிழக்கு. கிழமேல் ரோட்டுக்கும் வடக்கு, என்னிடம் கிரயம் பெற்ற எங்கள் பூமிக்கும் தெற்கு மேற்கு. இதன் மத்தியில் கிழமேல் ஜாதியடி 40 தென்வடல் 60 அடி அளவுள்ள மனை நிலமும் கிரயமும் கியரய சுவாதீனமும் கொடுத்ததாக கண்டுள்ளது. **பி.வா.சா.ஆ.5** 14.7.1971 தேதியில் மீண்டும் வெங்கடாச்சல நாடாருக்கு மீண்டும் கருப்பண்ணக் கவுண்டரும், முத்துசாமி கவுண்டரும் புல எண்.538ல் தாங்கள் கிரயம் பெற்ற 6.96ல் தென்கோடியில் ஏற்கனவே தங்களிடம் வெங்கடாச்சல நாடார் கிரயம் பெற்ற மனைக்கு கிழக்கு, இன்று தங்களிடம் கிரயம் பெற்றும் கைருன்னிசா பேகம் மனைக்கு மேற்கு, கிழமேல் ரோடுக்கும் வடக்கு, தங்கள் பூமிக்கு தெற்கு, கிழமேல் 7.1/4 தென் வடல் 60 அடி என மொத்தம் 435 அடி (1 செண்ட்) இடத்தை கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது

12) மேலே கண்ட ஆவணங்களிலிருந்தும் நாச்சியப்ப முதலியாரிடமிருந்து வா.சா.ஆ.1ன் மூலம் 2.5.69ம் தேதியில் பெரியண்ண கவுண்டர் மகன் முத்துசாமி புல எண்.537ல் ஏக்.4.94ல் பொதுவில் பாதி 2.47 ஏக்கரும், புல எண்.538 ஏக்.6.96ல் பொதுவில் பாதி ஏக்.3.48ம் கிரயம் பெற்றுள்ளார். அதே போல் அதே தேதியில் வா.சா.ஆ.2ன்படி நாச்சியப்ப முதலியாரிடமிருந்து கருப்பண்ண கவுண்டர் மகன் கருப்பண்ண கவுண்டர் புல எண்.537ல் ஏக்.6.96ல் பொதுவில் பாதி 3.48 ஏக்கரும் கியரம் பெற்றுள்ளார். இவ்வாறாக வா.சா.ஆ.1,2ன் மூலம் கிரையம் பெற்ற பெ. முத்துசாமி மற்றும்

கருப்பண்ணக் கவுண்டரும் இணைந்து பி.வா.சா.ஆ.2ன்படி 14.07.1997ம் தேதியில் கைருன்னிசா பேகத்திற்கு புல எண்.538ல் இருவரும் கிரயம் பெற்று ஏக்.6.96ல் வெங்கடாச்சல நாடார் மனைக்கும் தெற்கு கிழமேல் ரோடுக்கும் வடக்கு. இதன் மத்தியில் கிழமேல் 30 அடி , தென் வடல் 60 அடி உள்ள மனை நிலம் 1800 சதுரடி (4.1செண்ட்) இடத்தை கிரயம் கொடுத்துள்ளனர். மேலும், 10.02.1972ம் தேதியில் ரத்தினம் என்பவருக்கு புல எண்.538ல் வா.சா.ஆ.1,2ன்படி கிரயம் பெற்று கருப்பண்ணக் கவுண்டரும் பெ. முத்துசாமியும் தாங்கள் கிரயம் பெற்ற 6.96ல் தென் கோடியில் கிழமேல் ரோடுக்கும் வடக்கு, கைருன்னிசா பேகம் மனைக்கு கிழக்கு, தாங்கள் பூமிக்கும் தெற்கும், மேற்கும் இதற்குட்பட்ட கிழமேல் ஜாதியடி 40, தென்வடல் ஜாதியடி 60 கொண்ட மனையிடம் 2400 சதுரடி (5.5 செண்ட) இடத்தை கிரயம் கொடுத்துள்ளார். வெங்கடாச்சல நாடாருக்கு, கருப்பண்ணக் கவுண்டரும், பெ. முத்துசாமி கவுண்டரும் சேர்ந்து தாங்கள் கிரயம் பெற்ற 6.96 ஏக்கரில் புல எண்.538ல் தாங்கள் கிரயம் பெற்ற வெள்ளக் கவுண்டர் தங்கவேல் வகையறா பூமிக்கு வடக்கு இதன் மத்தியில் கிழமேல் 30 அடி தென் வடல் 60 அடி என 1800 சதுரடி (4.1 செண்ட்) இடத்தை 4.5.1971ம் தேதியிலும் **பி.வா.சா.ஆ.5படி** 14.7.1971 தேதியில் மீண்டும் வெங்கடாச்சல நாடாருக்கு கிழமேல் 7.1/4 தென் வடல் 60 அடி என மொத்தம் 435 அடி (1 செண்ட்) இடத்தையும் கிரயம் கொடுத்துள்ளார் என்பதால் வெங்கடாச்சல நாடார், கருப்பண்ணக் கவுண்டரும் மற்றும் பெ. முத்துசாமியிடமிருந்து 5.1 செண்ட் இடத்தை கிரயம் பெற்றுள்ளார் எனத் தெரிகிறது.

13) இவ்வாறாக கருப்பண்ண கவுண்டரும், பெ. முத்துசாமியும் கைருன்னிசா பேகத்திற்கு 4.1 சென்ட் ரத்தினம் என்பவருக்கு 5.5 செண்ட், வெங்கடாச்சல நாடாருக்கு மொத்தம் 5.1 செண்ட், என மொத்தம் 14.7செண்ட் இடத்தை புல எண்.538ல் கிரயம் கொடுத்ததாக கண்டுள்ளது. அவை மனை நிலம் என விவரிக்கப்பட்டு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1,2 பெ. முத்துசாமி கவுண்டரும், கருப்பண்ணக் கவுண்டரும் கிரயம் பெற்ற சொத்துக்களில் சொத்து விபரத்தில் புல எண்.537ல் நான்கெல்லைகளில் சாலையோர பாதை

குறிப்பிடப்படவில்லை. ஆனால், புல எண்.538ன் நான்கெல்லையில் கிழமேல் பாதைக்கும் வடக்கு என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கருப்பண்ணக் கவுண்டர் மற்றும் முத்துசாமி கவுண்டரிடமிருந்துதான் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கிரயம் பெறப்பட்டுள்ளது என்பதால் அவர்களின் கிரய முன்னவரான கருப்பண்ணக் கவுண்டரும், மற்றும் பெ. முத்துசாமியும் கிரயச் சொத்திற்கு முரணாக அவர்கள் கட்சி செய்ய தடை செய்யப்பட்டுள்ளனர். இந்த வகையில் பிரிவு 94 இந்திய சாட்சியச் சட்டம்படி பிரதிவாதிகளின் கட்சி மற்றும் சாட்சியத்தை ஏற்கதக்கதாக இல்லை என கீழமை நீதிமன்றத்தில் முடிவு செய்திருப்பது சரியானதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) **வா.சா.ஆ.3** 28.09.1973 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அசல். அதன்படி 1ம் வாதி வெள்ளைசாமிக்கு கருப்பண்ணக் கவுண்டரும் அவரது மகன் முத்துசாமி கவுண்டரும் முத்துசாமியின் மகன் கந்தசாமிக்கு பாதுகாவலர் என்ற முறையில் முத்துசாமியும் எழுதிக் கொடுத்த சுத்த கிரயப்பத்திரத்தின் அசல். அதில் சொத்து விபரத்தில் புல எண்.537 ஏக்.12.66க்கு வெள்ளக் கவுண்டர் பூமிக்கு கிழக்கு , காளியண்ண கவுண்டர் பங்கிற்கு தெற்கு, நந்தவனத்திற்கு மேற்கு இதன் மத்தியில் 4.94 பொதுவில் பாதி 2.47 ஏக்கர் மற்றும் புல எண்.538 ஏக்.11.54 இதில் வடபுறம் உள்ள கிணற்றுக்கு தென்புறம் காளியண்ணக் கவுண்டர் பூமிக்கு தெற்கு. தென் வடல் பாதைக்கு மேற்கு இதன் மத்தியில் ஏக்..6.79 இதில் பொதுவில் பாதி 3.39 1/2 கிரயம் கொடுத்ததாக கண்டுள்ளது. **வா.சா.ஆ.4** 28.09.1973ம் தேதியிட்ட கியரப்பத்திரத்தின் அசல். அதில் சுந்தரம் என்பவருக்கு முத்துசாமி கவுண்டரின் முதல் மனைவி காமாட்சி 2வது மனைவி கருமாரி அம்மாள் 1வது மனைவி குமாரத்திகள் பழனியம்மமாள், சிவகாமி, விஜயலட்சுமி, சோளியம்மாள் 2வது மனைவி குமாரர் பழனிசாமி ஆகிய 7 பேர்கள் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரத்தின் அசல். சொத்து விபரத்தில் தாந்தோணி கிராமம், புலஎண்.537ல் 12.66ல் வெள்ளாளக் கவ்ணடர் பூமிக்கு கிழக்கு, காளியண்ண கவுண்டர் பூமிக்கு தெற்கும், வடக்கும் , நந்தவனத்திற்க மேற்கு,இதன் மத்தியில் ஏக்.4.94 இதில் பொதுவில்பாதி ஏக்.2.47க்கு ரூ.1.47 புல எண். 538 ஏக்.11.54ல்

கிணற்றுக்கு தென்புறம் காளியண்ணக் கவுண்டர் பூமிக்கு தெற்கு தென்வடல் பாதை மேற்கு கிழமேல் பாதைக்கு வடக்கு. வெள்ளக் கவுண்டர் பூமிக்கு கிழக்க இதன் மத்தியில் ஏக்..6.79க்கு பொதுவில் பாதி ஏக்.3.39 1/2 கிரயம் கொடுத்ததாக கண்டுள்ளது.

15) புல எண்.538ன் நான்கெல்லையில் மட்டுமே கிழமேல் ரோடுக்கும் வடக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான பாதை புல எண்.538க்கு கண்டு வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ன்படி கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதால்தான் பி.வா.சா.ஆ.1,2,3,4 ஆவணங்களில் மனை நிலங்களாக விற்பனை செய்யப்பட்ட போது அவற்றுக்கு பாதையுடன் கிரையம் கொடுத்ததாக தெரிகிறது. பி.வா.சா.ஆ.1 முதல் 4 கிரய ஆவணங்களின்படி புல எண்.538ல் கிரயம் கொடுத்த மொத்த விஸ்தீர்ணம் 14.7 செண்ட், கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதால்தான் வாதிகளின் கிரயம் ஆவனங்களான வா.சா.ஆ.3ல் 1ம்வாதி வெள்ளைசாமிக்கு கருப்புசாமியும் அவரது மகனும் கொடுத்த கிரய ஆவணத்தில் புல எண்.538ல் விஸ்தீர்ணம் 6.79 ஏக் என குறைத்தும் அதில் பொதுவில் பாதி ஏக்.3.39.1/2 என்றும் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. புல எண்.537ல் கருப்பண்ணக் கவுண்டர் கிரயம் பெற்ற மொத்த விஸ்தீர்ணம் 2.47ம் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3லும் புல எண்.538ன் தெற்கு எல்லையாக கிழமேல் பாதைக்கு வடக்கு எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், **வாச.ா.ஆ.4** 2ம் வாதியின் தந்தையும், 3ம் வாதியின் மாமனாருமான சுந்தரத்திற்கு பெரியண்ண கவுன்டரின் மகன் முத்துசாமி கவுண்டரின் வாரிசுகள் 7 பேர் சேர்ந்து எழுதிக் கொடுத்த கியரப்பத்திரத்திலும் வாச.ா.ஆ3ல் கண்டவாறே புல எண்.537ல் பெ. முத்துசாமி கிரயம் பெற்ற மொத்த விஸ்தீர்ணம் 2.47 ஏக்கர் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. புல எண்.538ல் பி.வா.சா.ஆ.1,2 பி.வா.சா.ஆ.4 ஆவணங்களில் கிரயம் கொடுத்தது போக அவற்றை கழித்து மொத்த விஸ்தீர்ணம் 6.79ஏக்கரில் 3.39.1/2 ஏக்கர் கிரயம் கொடுத்ததாக கண்டுள்ளது. அதிலும் புல எண்.538ல் தான் நான்கெல்லையில் கிழமேல் பாதை இருப்பதாக கண்டுள்ளது. எனவே, கிரயப்பத்திரங்கள் ஏற்பட்ட 1969லிருந்து 1973வரை புல எண்.538லேயே தெற்கு

எல்லையில் கிழமேல் பாதை இருப்பது தெளிவாகிறது.

16) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற ஆணையர் இடத்தைப் பார்வையிட்டு புல எண்.538ல் பாதை இருப்பதாக காணப்படவில்லை என சொல்லியிருப்பது கிரயப்பத்திரங்களில் கண்ட சொத்து விபரத்தை தவறானது என குறிப்பிடுவதாக கருத முடியாது. இன்றயை தேதியில் பூஸ்துதியில் புல எண்.538க்கும் அதற்கு தெற்கில் இருக்கும் புல எண் 537க்கும் இடையில் பாதை இல்லை என்பது கியரப்பத்திரத்தின் நான்கெல்லை விபரத்தை மறுத்தளிக்க முடியாது. எனவே, பெ. முத்துசாமியும், கருப்பண்ணக் கவுண்டரும் வாதிகளுக்கு கிரயம் கொடுத்த பத்திரங்களில் புல எண் 538ல் தாங்கள் கிரயம் பெற்ற விஸ்தீரணத்தில் பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த விஸ்தீர்ணத்தை கழித்து தாங்கள் கிரயம் பெற்ற விஸ்தீர்ணத்தை விடக் குறைவான விஸ்தீர்ணத்தை வாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளனர் என்பதாலும், புல எண்.538ல் பாதை கண்டுள்ளது என்பதாலும் பிரதிவாதிகளின் கிரயச் சொத்து புல எண்.538ல் தான் உள்ளதென்று முடிவு செய்யப்படுகிறது. அதனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கைபடி புல எண் 537 முழுவதும் தரிசு நிலமாகவும், அதன் கடைசியில் கருவேல முட்கள் வடபுறத்தில் விவசாய நிலமாகவும் இருந்துள்ளது என்பதால் அதை பயன்படுத்தி பிரதிவாதிகள் தங்களுடைய கிரயச் சொத்து புல எண்.537ல் இருப்பதாக வாதம் செய்திருப்பதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

17) பிரதிவாதிகளின் பெயரில் புல எண் 537ல் கண்ட சொத்துக்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கபட்டிருப்பதாகவும், புல எண் 537ல் 1ம்பிரதிவாதி வெங்கடாசலம் வீடு கட்டி குடியிருந்து வரி செலுத்தி அனுபவித்து வந்ததாகவும், புலப்படத்தில் வீடு காட்டப்பட்டிருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டது. அது குறித்து பரிசீலிக்கையில், பி.வா.சா.4 துணை வட்டாட்சியர் தன் முதல் விசாரணை சாட்சியத்தில் 537/11, வெங்கடாச்சலம் என்பவர் பெயருக்கு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விஸ்தீர்ணம் 6.25 பூமியானது உள்ளதென்றும்,

வருவாய்துறை ஆவணங்களில் மேற்படி பூமியில் கட்டிடங்கள் உள்ளதா என்றால் வீடு உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். பி.வா.சா.4 வட்டாட்சியரின் சாட்சியம் மற்றும் **சா.சா.ஆ.**1 புல எண்.537 மற்றும் 538ன் உட்பிரிவுகள் அடங்கிய அ பதிவேட்டு நகல் சான்றாவணத்தின்படி புல எண்.537 12 உட்பிரிவுகளாக செய்யப்பட்டுள்ளது. புலஎண் 538 ஆனது 10 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளதென்பதும் தெரிகிறது. புல எண்.537/3, 537/5 ஆகியவை 2ம் வாதியின் தந்தையான சுந்தரம் பெயரில் புல எண்.341ல் பதிவாகியுள்ளது என்பதும், 537/18 பட்டா எண்.912ல் 1ம் வாதி வெள்ளைச்சாமி பெயரில் பதிவாகியுள்ளது என்பதும் புல எண்.537/11 பட்டா எண்.409ல் வெள்ளைச்சாமி பெயரில் பதிவாகியுள்ளதென்பதும் தெரிகிறது. மேலும், புல எண்.538/4 மற்றும் 537/7 மற்றும் 537/10 என 3 உட்பிரிவுகள் 1ம் வாதி வெள்ளசைாமி பெயரிலும் பட்டா எண்.912ல் புல எண்.538/6, 2ம் வாதியின் தந்தை சுந்தரம் பெயரிலும் பதிவாகியுள்ளது எனத் தெரிகிறது. **சா.சா.ஆ.2** வீரக்குட்டி கவுண்டர் பெயரிலும், வெங்கடாச்சலம் மற்றும் பாபு பெயரில் ஏற்பட்ட சிட்டா. **சா.சா.ஆ.3** புல எண்.537ன் புலப்படம். சா.சா.ஆ.3 ஆவணத்தில் புல எண்.537 புலப்படத்தில் உட்பிரிவு 11ல் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. **சா.சா.ஆ.4** புல எண்.538ன புலப்படம். 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு அருகில் உள்ள சொத்துக்களை கிரயம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ள போதிலும் அதே புலப்படத்தில் உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ள புல எண்.537/10, 537/12 ஆகியவை 3ம் பிரதிவாதியின் பெயரிலும், 2ம் பிரதிவாதியின் பெயரிலும் அந்த உட்பிரிவுகளுக்கு பட்டா எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிகிறது.

18) மேலும், கிரயப் பத்திரங்களில் புல எண்.538க்கு தான் பாதை உள்ளதென தெளிவாக கண்டுள்ள நிலையில் புல எண்.537ல் பிரதிவாதிகள் பெயருக்கு கிரய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும் புல எண்.537/11 என பட்டா எண்.909ல் வெங்கடாச்சல நாடார் பெயருக்கு அ பதிவேடு (பி.வா.சா.ஆ.8) ஏற்பட்டதும், பட்டா (பி.வா.சா.ஆ.9) ஏற்பட்டதும், 2ம் பிரதிவாதியின் கணவர் என பிரதிவாதிகள் கட்சி செய்யும் பாபு என்பவர் பெயரில் புல எண்.537/12க்கு பட்டா எண்.513 ஏற்பட்டதும், எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. வருவாய்துறை

அதிகாரிகள் எதன் அடிப்படையில் பிரதிவாதிகள் பெயரில் புல எண்.537ல் உட்பிரிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்பதற்கும் பி.வா.சா.4ன் சாட்சியத்தில் எந்த விளக்கமும் இல்லை. கைருன்னிசா 2ம் பிரதிவாதியாக உயிருடன் உள்ள நிலையில் அவர் கிரயம் பெற்றதாக சொல்லும் சொத்திற்கு அவரது கணவர் சையது முகமது என்கிற பாபு என்பதும் அவரது பெயரில் பி.வா.சா.ஆ.3 பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், பி.வா.சா.2 சொல்லியிருப்பதும் எதன் அடிப்படையில் அவ்வாறு பாபு என்ற பெயரில் புல எண்.537/12க்கு பட்டா எண்.513 ஏற்பட்டது என்பதற்கும், பி.வா.சா.4 வட்டாட்சியரின் சாட்சியத்திலும் எந்த விளக்கமும் இல்லை. எனவே, **பி.வா.சா.ஆ.3ல்** புல எண் 537/ 12 என பாபு என்பவர் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டடிருப்பதும் பி.வா.சா.ஆ.9ல் புல எண்.537/11 வெங்கடாச்சல நாடார் பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதும் அடிப்படையற்றது என்றும், அந்தப் பட்டாக்கள் புல எண்.537ல் பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) பிரதிவாதிகள் தரப்பில் வெங்கடாச்சலம், தான் கிரயம் பெற்ற இடத்தில் வீடு கட்டி குடியிருந்ததாகவும், அத்றகான வீட்டு வரி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளார். 1976லிருந்து வெங்கடாச்சலம் பெயரில் வீட்டு வரி ரசீதுகள் ஏற்பட்டுள்ளது. ஆனால், வரி விதிப்பு எண்கள் 85 எனவும் கண்டுள்ளது. வரி ரசீதை வைத்து அந்த வீடானது எந்த புல எண்ணில் இருந்தது என குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஆனால், நாளது தேதியில் ஆணையர் பார்வையிடும் போது வெங்கடாசலத்தின் வீடு எதுவும் புல எண்.538லோ 537லோ காட்டப்படவில்லை. வெங்கடாச்சலம் பெயருக்கு புல எண்.537ல் உரிமை ஆவணம் ஏற்பட்டது என காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் எந்த அடிப்படையுமின்றி வருவாய்துறையில் ஏற்பட்ட உட்பிரிவு கணக்குகளை வைத்தும் புலப் படத்தை வைத்தும் வெங்கடாசலத்தின் வீடு புல எண்.537ல் தான் வீடு இருந்ததாகவும், வெங்கடாசலம் கிரயம் பெற்ற சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வந்ததாகவும், 1ம்பிரதிவாதி அதை உறுதி செய்வதற்காக வெங்கடாசலத்தின் பெயரிலான வீட்டு வரி ரசீது பி.வா.சா.ஆ.1 எனவும், குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது ஏற்கும்படியில்லை. எனவே, புல எண்.537ல் பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்து

இல்லையென முடிவு செய்யப்படுகிறது.

20) இந்நிலையில் மேலே பத்தி 15ல் விவரித்தபடி, புல எண்.538ல் பி.வா.சா.ஆ.1,2 பி.வா.சா.ஆ.4 ஆவணங்களில் மொத்தம் 14.7 சென்ட் கிரயம் கொடுத்தது போக மொத்த விஸ்தீரணம் 6.96ல் அவற்றை கழித்து மீதி விஸ்தீர்ணம் 6.79ஏக்கரில் 3.39.1/2 ஏக்கர் கிரயம் கொடுத்ததாக வா.சா.ஆ.3,4 கண்டுள்ளது. தாவா சொத்துக்கள் தாவா தாக்கல் செய்த நாளில் 05.09.2011ம் தேதியில் தரிசாக உள்ள நிலையில் சொத்துக்களின் சுவாதீனத்தை அவற்றின் உரிமையை வைத்து தான் முடிவு செய்ய முடியும். இந்நிலையில் 1ம் வாதிக்கும் கிரயத்தின் அடிப்படையிலும் 2,3 வாதிகளுக்கு 2ம் வாதிக்கு அவரது தந்தையும் 3ம் வாதிக்கு மாமனாரான சுந்தரம் கிரயம் பெற்று அவருடைய வாரிசு என்ற அடிப்படையில் தாவா புல எண்.537ல் வாதிகளுக்கு மொத்தம் 4.94 புல எண்.538ல் 1ம் வாதிக்கு ஏக்.3.39.1/2செண்ட் மற்றும் 2,3 வாதிகளுக்கு சேர்த்து ஏக்.3.39.1/2 உரிமையானது என்பதால் அந்தச் சொத்துக்கள் உரிமையின் அடிப்பபடையில் வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாகவே முடிவு செய்யப்படுகிறது. பிரதிவாதிகளின் கட்சிப்படி புல எண்.537ல் மட்டுமே அவர்கள் கட்சி செய்து வருகின்றனர். புல எண்.537ல் அவர்களுக்கு உரிமை எதுவும் இல்லாத நிலையில் அந்த இடத்தில் வாதிகளின் உரிமையின் அடிப்படையிலான சுவாதீன அனுபவத்தை எவ்வகையிலும் தடை செய்ய உரிமையற்றவர்கள். புல எண்.538ல்வாதிகளின் உரிமையின் அடிப்படையிலான அனுபவத்தை எதிர்த்து பிரதிவாதிகள் எந்த கட்சியும் செய்யவில்லை. பிரதிவாதிகளின் கிரயச் சொத்துக்களை அவர்கள் கண்டறிவதற்காக தனியாக வழக்கு தாக்கல் செய்து தீர்வு பெற முடியுமே தவிர வாதிகள் நிரந்தர தடையாணை பரிகாரத்திற்காக தாக்கல் செய்த இவ்வழக்கில் எந்த தீர்வும் காணமுடியாது. எனவே, புல எண்.537ல் 1ம்வாதியும் 2,3 வாதிகளின் வாரிசு முறையிலான உரிமையின் அடிப்படையிலான சுவாதீனத்தை எவ்வகையிலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தடை செய்யக் கூடாதெனவும் , புல எண்.538ல் வாதிகளின் உரிமையின் அடிப்பபடையிலான இடத்திற்கு மட்டும் சுவாதீன அனுபவத்தில் 1 முதல் 3பிரதிவாதிகள் எவ்வித இடையூறும்

செய்யக் கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் பெற வாதிகள் அருகதையுடையவர்கள் என்று இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, அசல் வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் தலையிடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என்று இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21) முடிவாக,இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, கரூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.470/2011-ல் கடந்த 25.09.2018-ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி .செய்யப்படுகிறது. செலவு தொகை பற்றிய உத்தரவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2019-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- அ.மலர்விழி
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.